[1989 நவம்பர் 2

குறுகிய கால வினா

தமிழ்நாடு அரசு ஹெலிகாப்டர்.

*7139 திரு. அன்பில் பொய்யாமொழி :
மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் அரசின் சார்பாக ஹெலிகாப்டர் வாங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) தற்பொழுது என்ன நிலைமையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1982-ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் பெங்களூரி லுள்ள இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் என்ற நிறுவனத்திட மிருந்து 70 லட்சம் ரூபாய் விலைக்கு ஆறு இருக்கைகள் கொண்ட சேதக் ஹெலிகாப்டர் ஒன்று வாங்கப்பட்டது.

(இ) இப்போது அந்த ஹெலிகாப்டர் விற்பனை செய்யப் படுகிற நிலைமையில் இருக்கிறது.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான அந்த ஹெலிகாப்டர் இருக்கிறபோது வாடகைக்கு ஹெலிகாப்டர் எடுக்கப்பட்டதா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிற்குரிய ஒரு ஹெலிகாப்டர் இருந்தும் கூட சில நேரங்களில் வாடகைக்கு இந்திய பாதுகாப்புப்படை யின் பிரிவான ஆகாய விமானப்படை ஹெலிகாப்டரும், மத்திய அரசுத் துறைக்குச் சொந்தமான Palam Hans Ltd., என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான ஹெலிகாப்டரும் இரண்டொரு முறை வாடகைக்கு எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வாடகைக்கு எடுக்கப்பட்டதன் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

1989 நவம்பர் 21]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15,91,687 ரூபாய். சுமார் 16 லட்சம் ரூபாய்.

9-20 மணி

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள ஹெலிகாப்டரை விற்ற பிறகு புதிதாக ஹெலிகாப்டரை வாங்க அரசுக்கு உத்தேசம் உண்டா? மாநில அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் இருக்கும்போது, மாநில அரசினுடைய முதலமைச்சர் தேர்தல் சமயங்களிலே அதைப் பயன்படுத்த முடியாது என்கிற தடை இருக்கிறதே, அதை நீக்குவதற்கு இந்த அரசு தேர்தல் கமிஷனுக்கு முறையீடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பயன்படுத்த முடியாத ஹெலிகாப்டர் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன என்பதற்காகத்தான் அதை விற்றுவிட முடிவு செய்தோம். அதிலே கூட ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு 1 கோடி ரூபாய்க்கு அதை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. 1.4 கோடி ரூபாய்க்கு வாங்குவதற்கு மேற்கு வங்கம் இசைவு தெரிவித்திருக்கிறது. அதை ஏற்றுக் கொண்டு இந்த ஹெலிகாப்டர் இங்கிருந்து புறப்படத் தயாராக இருக்கிறது.

அரசுத் தேர்வுகளுக்குக் கண்காணிப்பாளராகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊதியத் தொகை.

*3030 திரு. செ. இராமலிங்கம்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆசிரியர்கள் அரசுத் தேர்வுகளுக்கு கண்காணிப்பாளராகப் பணியாற்றியமைக்கு (invigilator) ஊதியத் தொகை எவ்வளவு வழங்கப்படுகிறது?

(ஆ) காலதாமதமின்றி வழங்க ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே,